[1987 மார்ச் 24

குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.

145—(*வினா எண். 7081) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில், வணிகவியல் பிரிவில் மேலும் சில இடங்கள் அதிகரிக்கவேண்டி விண்ணப்பம் ஏதேனும் இத்துறைக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் வணிகவியல் வகுப்பு 1983-84 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகத்தினால் 40 இடங்கள் மட்டும் அங்கீகரிக்கப்பட்டு தொடங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் வணிகவியல் பட்ட வகுப்பிற்கு அதிக மாணவிகள் விண்ணப்பிப்பதால் மேலும் 20 இடங்களுக்குக் கல்லூரி கல்வித்துறை வழியாக பாரதிதாசன் பல்கலைக் கழகம் அங்கீகாரம் அளித்துள்ளது.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கலைக்கல்லூரி ஆரம்பிப்பதற்கு இடம் கிடைக்காததால் இருக்கின்ற மகளிர் கல்லூரியில் அதிகமான கட்டடங்களைக் கட்டுவதற்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அரசு ஏற்கெனவே பரிசீலித்து அவ்வப்போது நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்து வருகிறது.

சிறப்பு நீதிபதிகள் அமர்த்தல்.

146—(*வினா எண் 8697) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விசாரிக்கப்படாத பல வழக்குகளை விரைவில் விசாரித்து, தீர்ப்பு வழங்க "சிறப்பு நீதிபதிகள்" அமர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.